(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



7 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் ஏழு

nselva.com

காலம் அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சுக்கிர வாரம் என்று அழைக்கப்படும் கிழமை எது?
   1) வெள்ளி 2) செவ்வாய் 3) திங்கள் 4) புதன்
2. ''நமசிவாய'' என்பது.
   1) திருமந்திரம் 2) பிரணவமந்திரம் 3) சிவசின்னம் 4) பஞ்சாட்சர மந்திரம்
3. கொலை, களவு, காமம், பொய் கள்ளுண்ணல் என்பவை.
   1) ஐம்பொறிகள் 2) ஐம்புலன் 3) பஞ்சமாபாதகம் 4) ஐந்தொழில்
4. திருமணத்தின் போது இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர்.
   1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) சேரமான் 4) அப்பர்
5. கொலுவைத்தல் நிகழ்வு இடம் பெறும் பண்டிகை.
   1) சிவராத்திரி 2) திருவாதிரை 3) புதுவருடம் 4) நவராத்திரி
6. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர்.
   1) இராஜராஜ சோழன் 2) நம்பியாண்டார் நம்பி
   3) சிவபாதவிருதையர் 4) இராஜேந்திர சோழன்
7. பின்வருவனவற்றுள் நட்சத்திர அடிப்படையில் அனுஷ்டிக்கப்படும் விரதம் அல்லாதது.
   1) மாசிமகம் 2) பங்குனி உத்தரம் 3) சதுர்த்தி விரதம் 4) திருக்கார்த்திகை விரதம்
8. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் போற்றப்படும் கடவுள்.
   1) கணபதி 2) சிவன் 3) திருமால் 4) முருகன்
9. இலுப்பை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட ஆலயம்
   1) தெல்லிப்பளை துர்க்கை அம்மன் 2) கதிர்காமம்
   3) நகுலேச்சரம் 4) மானிப்பாய் மருதடி விநாயகர்
10. ''மகர சங்கிராந்தி'' என அழைக்கப்படும் பண்டிகை.
    1) தீபாவளி 2) புதுவருடப்பிறப்பு 3) தைப்பொங்கல் 4) ஆடிப்பிறப்பு
11. நட்சத்திரங்கள் எத்தனை?
    1) 12 2) 27 3) 18 4) 9
12. பத்தாம் திருமுறையில் அடங்குவது.
    1) திருமந்திரம் 2) திருவிசைப்பா 3) திருவாசகம் 4) தேவாரம்
13. ''விருது குன்ற மா'' என்ற திருக்கேதீச்சரப் பதிகத்தின் பண்.
    1) நட்டபாடை 2) காந்தாரம் 3) புறநீர்மை 4) நட்டராகம்

14. திருவாசகம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
1) 3ம் திருமுறை 2) 10ம் திருமுறை 3) 12ம் திருமுறை 4) 8ம் திருமுறை

15. சிவதரிசன பலனைத் தருபவர்.
1) சிவன் 2) சண்டேஸ்சுரர் 3) முருகன் 4) வைரவர்

16. பொன்னார் மேனியனே என்னும் பதிகத்தைப் பாடியவர்.
1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) அப்பர் 4) மாணிக்கவாசகர்

17. குறிஞ்சிக் குமரன் ஆலயம் அமைந்துள்ள இடம்.
1) கண்டி 2) நுவரெலியா 3) யாழ்ப்பாணம் 4) பழனி

18. புதுமனை புகுதல் என்பது?
1) நிலை வைத்தல் 2) அத்திவாரம் இடல் 3) கிரகப் பிரவேசம் 4) சாந்தி செய்தல்

19. திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது?
1) திருநாவலூர் 2) சீர்காழி 3) திருவாதவூர் 4) திருவாரூர்

20. திருநாவுக்கரசரின் தந்தையின் திருநாமம்.
1) சிவபாதவிருதையர் 2) சம்புபாதாசாரியார் 3) சடையனார் 4) புகழனார்

21. சித்தாண்டி முருகன் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்.
1) திருகோணமலை 2) யாழ்ப்பாணம் 3) மட்டக்களப்பு 4) கண்டி

22. அமுது செய்வித்த அன்பர் எனப் போற்றப்படுபவர்.
1) திலகவதியார் 2) இளையான்குடிமாற நாயனார்
3) திருமூலர் 4) மாணிக்கவாசகர்

23. சேர். பொன். இராமநாதன் ஆரம்பக்கல்வியை எங்கு கற்றார்?
1) யாழ் இந்துக்கல்லூரி 2) மட்டக்களப்பு விவேகானந்தாக் கல்லூரி
3) கொழும்பு றோயல் கல்லூரி 4) வவுனியா சைவபிரகாச வித்தியாலயம்

24. பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் குடி கொண்ட இறைவன்.
1) சிவபெருமான் 2) விநாயகர் 3) முருகன் 4) அம்மன்

25. 7ம் திருமுறையை அருளிச் செய்த தேவாரமுதலி.
1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மணிக்கவாசகர்

(25 புள்ளிகள்**)**

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்கு வழங்கப்படும் வேறொரு திருநாமம் யாது?
.....
2. திருவாசகம் யாரால் அருளப்பட்டது? .....
3. 8ம் திருமுறையில் அடங்குபவை எவை? .....
4. திருக்கேதீச்சரத்தின் தீர்த்தம் யாது? .....
5. ஆகம நெறிக்குட்படாத வழிபாடு எப்பெயரால் அழைக்கப்படும்? .....
6. 19ம் நூற்றாண்டில் இலங்கையில் சைவம் தழைக்க வழி சமைத்தவர்? .....
7. சிவனால் ''அம்மையே'' என அழைக்கப்படும் பேறுபெற்றவர் யார்? .....
8. திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார்? .....
9. பொன்னார் மேனியனே என்னும் தேவாரம் எத்தலத்தின் மீது பாடப் பெற்றது?
.....
10. சுந்தரரின் இளமைப் பெயர் யாது? .....
11. இராமபிரான் எத்தனை ஆண்டுகள் வனவாசம் செய்தார்? .....
12. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளும் எவை?
1)..... 2)..... 3).....
13. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகோற்சவம் எத்தனை நாட்கள் நடைபெறும்? .....

14. ஆலயத்தில் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகள் 3 தருக?

1)..... 2)..... 3).....

15. சேத்தனார் திருப்பல்லாண்டு பாடத் தேரினை ஓடச் செய்த தலம் எது?.....

(15 x 1 = 15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர் பாடப்பெற்ற தலம் என்பவற்றையும் எழுதுக.

1. மாதர்பிறைக் கண்ணியானை
2. பொன்னார் மேனியனே
3. அன்னநடையார் அமுத மொழியார்.
4. முத்தி நெறி அறியாத

(2 x5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. அந்தணர் என்போர் .....
2. நிறை மொழி மாந்தர் .....
3. துறந்தார் பெருமை .....
4. மனத்துகண் மா(சு) இலன் .....
5. அறத்தான் வருவதே ..... **(5 x1 = 5** புள்ளிகள்**)**

பகுதி - III

1. எவையேனும் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அடியார்க்கு அடியார்களாக நாயன்மார்கள் விளங்கினார்கள்.
   (அ) உழவர் படையாளி எனச் சிறப்பித்துக் கூறப்படும் நாயனார் பெயர் யாது? அவரின் மறுபெயர் 2 தருக?
   (ஆ) மூன்று வயதில் தேவாரம் பாடிய நாயனார் பெயர் என்ன? அவர் பாடிய முதல் தேவாரம் எது?
   (இ) சுந்தரமூர்த்தி நாயனாரின் குரு பூசைத் தினம் எது? அவரது தந்தை, தாய் பெயர்களை தருக? **(9** புள்ளிகள்**)**
2. மனிதன் தனது உடலையும் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்தும் திருநாட்களே விரதம் எனப்படும்.
   (அ) விரத நாட்களில் செய்யக்கூடிய கருமங்கள் 3 தருக?
   (ஆ) வார விரதங்கள் 2 தருக, திதி விரதங்கள் 2 தருக?
   (இ) விரதம் பற்றிய நாவலரின் கூற்றைத் தருக?

   (9 புள்ளிகள்**)**
3. இலங்கை சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்படுகிறது.
   (அ) இலங்கையில் பாடல் பெற்ற தலங்கள் 2 தருக. இலங்கையின் முருகன் ஆலயங்கள் 2 தருக.
   (ஆ) கன்னியா தீர்த்தத்தை அமைத்தவன் யார்? யாருக்காக அமைத்தான்?
   (இ) யாருடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டன? இராமரும், வியாசரும் வழிபட்ட சிவதலம் எது?

   (9 புள்ளிகள்**)**

4. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

(அ) ஆலயம் கோயில் என்பவற்றின் பொருளைத் தருக?

(ஆ) ஆலயங்களில் செய்யக்கூடிய கிரியைத் தொண்டுகள் 2 தருக?

(இ) பஞ்சாங்க நமஸ்காரத்தில் நிலத்தில் பொருந்தும் பெண்களின் 5 உறுப்புக்களும் எவை? ஆலயத்திற்கு கொண்டு செல்லவேண்டிய பூசைப்பொருட்கள் எவை?

(9 புள்ளிகள்**)**

5. சமயம் என்பது மனித வாழ்வினை நெறிப்படுத்தும் பாதையாகும்.

(அ) பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்கள் 2 தருக?

(ஆ) மாணவர்கள் பாடசாலையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் 2 தருக?

(இ) நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் பண்புகள் 2 தருக?
பணிவு பற்றிய திருக்குறள் ஒன்றைத் தருக?

(9 புள்ளிகள்**)**

6. பண்டிகைகளும், கோயில் வழிபாடும் எம் உள்ளத்தை வளப்படுத்தும் நிகழ்வுகளாகும்.

(அ) கோயிலில் புரியக் கூடிய சரியைத் தொண்டுகள் ஐந்து எழுதுக.

(ஆ) கிரியை வழிபாட்டால் முத்தியடைந்த நாயன்மார்கள் மூவரின் பெயர்களை எழுதுக.

(இ) தைப்பொங்கல் பண்டிகையின் வேறு பெயர்களை 3 தருக?
பட்டிப்பொங்கல் கொண்டாடும் முறையை விளக்குக.

(9 புள்ளிகள்**)**